[12th August 1963

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், முன்பு அரசியல் தியாகிகளுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டபோது சிலருக்கு நல்ல நிலங்களும், சிலருக்கு மட்டமான நிலங்களும் கொடுக்கப்பட்டன. செல்வாக்குப் பெற்ற அரசியல் தியாகிகளுக்கு நல்ல நிலங்கள் கொடுக்கப்பட்டன என்றும், செல்வாக்கு இல்லாத அரசியல் தியாகிகளுக்குப் பிரயோசனம் இல்லாத நிலங்கள் கொடுக்கப்பட்டன என்பதும் உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் பெறும் நிலம் கெட்டதா, நல்லதா, பயனுள்ளதா, பயனற்றதா என்பது அவரவர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

திரு. எம். எஸ். மணி : ஸார், விடுதலைப் போராட்டத்தின் போது திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வரைக்கும் நல்லது. திராவிட முன்னேற்றக் கழகம் விடுதலைப் போராட்டத்தை எதிர்க்கவில்லை என்பது, பின்னால் பிறந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு திருப்தி அளிக்கக் கூடியதுதான்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஸார், அமைச்சர் அவர்கள் மத்திய அரசிலிருந்து பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு கொடுக்கப்படுகிறது ? ஆண்டு ஒன்றுக்கா அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரே முறையாகத்தான் கொடுக்கிறார்கள். அவரவர் நிலைமைக்குத் தகுந்தவாறு கொடுக்கிறார்கள். தேவைக்குத் தக்கவாறு கொடுக்கிறார்கள். நூறு ரூபாயாகவும் இருக்கலாம். 5,000 ரூபாயாகவும் இருக்கலாம். எல்லாவற்றையும் நன்கு பரிசீலனை செய்துவான் கொடுக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : கொடுக்கப்படும் பணம் அரசாங்கத்தின் பணமா, அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்து கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசினர் கொடுக்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு மேல் தகவல் வேண்டுமானால் கனம் அங்கத்தினர் தன்னுடைய நண்பர்களுக்குச் சொல்லி பார்லிமெண்டில் கேள்விகள் கேட்கச் சொல்லலாம்.

Construction of bridge (Alangudi taluk)

* 106 *Q.*—SRI P. MURUGAIYAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to construct a bridge across the Vellanad Kanmoi in Alangudi taluk on the cart track from Vallathirakottai in view of the fact that the agriculturists have to take a round about route during the rainy season to reach the fields, as the bank of the Kanmoi is lengthy?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

12th August 1963]

திரு. பி. முருகையன் : ஸார், இந்தக் கண்மாய் சுமார் 7 மைல் கரையுடையதாக இருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்ய மழை காலத்தில் போவதற்குக் கஷ்டப்படுகிருர்கள் ; தற்போது ஏரியின் நடுவில் ஒரு ரோடு இருக்கிறது. அதன் மீது ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவச்சலம் : இதுபற்றி மதிப்பிடப் பட்டது. இதற்கு 40,000 ரூபாய் ஆகிறது. வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிலிருந்து 15,000 ரூபாய் வரையில் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுக்கமுடியாது. பஞ்சாயத்தும், பொது மக்களும் உதவி அளிக்க முன் வந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். பஞ்சாயத்தில் நிதி இல்லை என்று சொல்லி விட்டார் கள். அக்கரை உள்ள பொது மக்களும் நிதி வசூலிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

டாக்சிகள்.

*107 *கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச் சிராப்பள்ளி முதலிய நகரங்களில் ஓடுகின்ற டாக்சிகளுக்கு மீட்டர் அமைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா ?

(இ) இல்லையென்ருல், இனிமேலாவது மீட்டர் வைக்கும்படி சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Under the Madras Motor Vehicles Rules, taxis plying in the mofussil should be fitted with either taxi-meters or mile-meters.

*108 *கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) தற்போது சென்னை நகரில் எத்தனை டாக்சிகள் உள்ளன?

(இ) இரவு 8 மணிக்கு மேல் டாக்சிகள் ஓடுவதற்கான வசதி செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM : (*a*) 1,607.

(*b*) There is no time restriction for plying taxis.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், சென்னை நகரில் போலீஸ் உபத்திரவத்தால் இரவு 9 மணிக்கு மேல் அதிகமாக டாக்ஸி ஓடுவது இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது கனம் அங்கத்தினர் கருத்தாக இருக்கலாம். போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அதை அவர்கள் உபத்திரவம் செய்கிருர்கள் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்வளவோ விபத்துக்கள் ஏற்படுகின்றன. டாக்ஸி டிரைவர்கள்